**மே – 23**

# TNPSC துளிகள்

- எழுத்தாளர், ஆர்வலர் மற்றும் வழக்கறிஞருமான பானு முஷ்டாக்கின் 'Heart Lamp' என்ற சிறுகதைத் தொகுப்பானது இலண்டனில் மதிப்புமிக்க சர்வதேச புக்கர் பரிசை வென்ற முதல் கன்னடப் படைப்பாக மாறியது.
- உலக சுகாதார அமைப்பானது ஜெனீவா நகரில் நடைபெற்ற 78வது உலக சுகாதார சபையில், பொது சுகாதாரப் பிரச்சனையாக விளங்கும் டிராக்கோமா பாதிப்பினை (கருவிழித் தொற்று) ஒழித்ததற்கான சான்றிதழ் இந்தியாவிற்கு வழங்கப் பட்டுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## அரசு ஊழியர்களுக்கான நலச் சேவைகளுக்கான ஒப்பந்தம்




- தமிழ்நாடு அரசானது, மாநில அரசு ஊழியர்களுக்கு பல்வேறு காப்பீட்டுத் தொகைகள் மற்றும் சலுகைகளை இலவசமாக வழங்குவதற்கு ஒப்புக் கொண்ட ஏழு வங்கிகளுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- பாரத் ஸ்டேட் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, இந்தியன் வங்கி, கனரா வங்கி, ஆக்சிஸ் வங்கி, பாங்க் ஆஃப் பரோடா மற்றும் யூனியன் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.
- ஒப்பந்தத்தின் சில விதிகளாவன:
  - விபத்து காரணமாக மரணம் அல்லது நிரந்தர உறுப்புச் செயல்பாட்டுக் குறைபாடு ஏற்பட்டால் 1 கோடி ரூபாய் தனிநபர் விபத்து காப்பீட்டுத் தொகை,
  - விபத்தில் உயிரிழந்த அரசு ஊழியரின் மகள்களின் திருமணச் செலவுகளுக்கு 5 லட்சம் ரூபாய் உதவி,
  - விபத்தில் உயரிழந்த அரசு ஊழியரின் இரண்டு மகள்களின் உயர்கல்விக்காக, வங்கிகளால் 10 லட்சம் ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும்,

  - பணியின் போது இயற்கை மரணம் ஏற்பட்டால் 10 லட்சம் ரூபாய் கால ஆயுள் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும்.

## தமிழ்நாடு சிறைச்சாலை விதிகள் 2024




- ❖ தமிழக மாநில அரசானது, மாநிலத்தில் உள்ள சிறைச்சாலைகள் மற்றும் சீர்திருத்த நிறுவனங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டைத் தடை செய்யும் வகையில் அதன் விதிகளில் திருத்தம் செய்துள்ளது.
- ❖ 2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறை விதிகளில் சில துணை விதிகள் அறிமுகப்படுத்தப் பட்டன.
- ❖ சிறைச் சாலைக்குள் உள்ள கழிவுநீர் அல்லது மலமக்கல் தொட்டியினைக் கையினால் சுத்தம் செய்தல் அல்லது அபாயகரமான முறையில் சுத்தம் செய்தல் ஆகியவற்றை மேற்கொள்ளக் கூடாது.
- ❖ இது 2013 ஆம் ஆண்டு கழிவுகளை வெறும் கைகளால் அள்ளும் பணியில் மக்கள் பணியமர்த்தப்படுவதைத் தடை செய்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்வுச் சட்டத்தின் படி உருவாக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்தப் புதிய துணை விதியின்படி, ஒரு கைதியை சிறைச்சாலைக்குள் அனுமதிக்கும் நேரத்தில், சிறை அதிகாரிகள் அந்தக் கைதியின் சாதி பற்றிய எந்த விவரங்களையும் விசாரிக்கவோ அல்லது பெறவோ, பதிவு செய்யவோ கூடாது.
- ❖ எந்தவொரு பதிவேட்டிலோ அல்லது பதிவிலோ கைதியின் சாதி தொடர்பான எந்த விதியோ அல்லது பத்தியோ பேணப்படக் கூடாது.
- ❖ சிறைச் சாலைகளில் சாதி அடிப்படையில் எந்தப் பணி / பணிகளிலும் ஈடுபடுத்தப் படக் கூடாது என்பதோடு பணி ஒதுக்கீட்டில் கைதிகளுக்கு எந்தப் பாகுபாடும் இல்லை என்பதை கண்டிப்பாக உறுதி செய்ய வேண்டும்.

# தேசியச் செய்திகள்

## உச்ச நீதிமன்ற நீதிபதியின் அந்தஸ்து 2025


- ❖ 1950 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டதிலிருந்து, உச்ச நீதிமன்றத்தில் பட்டியலிடப்பட்டச்

சாதியினர் அல்லது பட்டியலிடப்பட்டப் பழங்குடியினரைச் சேர்ந்த ஏழு நீதிபதிகள் மட்டுமே இருந்தனர்.

- 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் பல்வேறு உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் பதவிக்கு உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்தவர்களில் 3.6% பேர் மட்டுமே பட்டியலிடப்பட்ட சாதியினரைச் சேர்ந்தவர்கள் மற்றும் அதற்கும் குறைவானவர்களே பட்டியலிடப்பட்ட பழங்குடியினரைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகளாக 221 பெயர்களை நீதிபதிகள் தேர்வுக் குழு (கொலீஜியம்) பரிந்துரைத்தது.
- இவர்களில் 8 பேர் பட்டியலிடப்பட்ட சாதியினரைச் சேர்ந்தவர்கள் மற்றும் 7 பேர் மட்டுமே பட்டியலிடப்பட்ட பழங்குடியினரைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- மேலும், இந்த 221 பெயர்களில் சிலவற்றை இன்னும் மத்திய அரசு நியமிக்கவில்லை.
- இதரப் பிற்படுத்தப்பட்ட சாதியினர் வகுப்பினைச் சேர்ந்த சுமார் 14.5% அல்லது 32 நபர்கள் நியமிக்கப் பட்டனர் அதில் பெண்கள் 15.3% அல்லது 34 நபர்களாக இருந்தனர்.
- உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் தேர்வுக் குழுவினால் பெயரிடப்பட்ட மொத்தம் சுமார் 124 பேர் அதாவது பரிந்துரைக்கப்பட்டவர்களில் சுமார் 56% பேர் பொதுப் பிரிவைச் சேர்ந்தவர்கள், ஆனால் பெண்கள் அல்லது சிறுபான்மையினர் யாரும் இதில் இடம் பெற வில்லை.
- இந்தப் பதவிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட நீதிபதிகளில் சுமார் 6% பேர் ஏற்கனவே உள்ள நீதிபதிகளுடன் தொடர்புடையவர்கள்.
- உச்ச நீதிமன்றம் இந்தச் செய்தி அறிக்கையினை வெளியிடுவதற்கான காரணத்தைக் கூறவில்லை ஆனால் அது "பொதுமக்களின் அறிவு மற்றும் ஒரு விழிப்புணர்வுக்காக" வெளியிடப் பட்டது என்று கூறியது.
- உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவிகளுக்கான பாதிக்கும் மேற்பட்ட பரிந்துரைகள் (52.9%) வழக்கறிஞர் சபையிடமிருந்து வந்ததாகவும், வழக்கறிஞர்களாக மாறிய நீதிபதிகள் பெரும்பான்மையாக இருப்பதையும் உச்ச நீதிமன்றத்தின் தரவு காட்டுகிறது.
- மாறாக, நீதிபதிகள் தேர்வுக் குழுவானது, உயர் நீதிமன்ற நீதிபதிகள் பதவிக்கு மாவட்ட நீதிமன்றங்களில் இருந்து ஏற்கனவே பணியாற்றும் நீதிபதிகளின் பெயர்களையும் பரிந்துரைக்கலாம்.
- உச்ச நீதிமன்றத்தில் எந்தவொரு அடையாளத்தின் அடிப்படையிலான இட ஒதுக்கீடும் இல்லை.
- உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தேர்வுக் குழுவானது, உயர் நீதிமன்ற நீதிபதி பதவிக்கு ஒரு தகுதியின் அடிப்படையில் மட்டுமே பரிந்துரைகளை செய்கிறதே தவிர, ஒரு நபரின் பாலினம் அல்லது சாதி அடையாளம் அதில் எந்தப் பங்கையும் வகிக்கக் கூடாது.
- ஒவ்வொரு மாநிலத்திலும் இட ஒதுக்கீடு காரணமாக மாவட்ட நீதித்துறை நியமனம் வேறுபட்டு உள்ளது ஆனால் உயர் நீதிமன்றத்தில் அவற்றின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிக்கும் அளவுக்கு மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் பெரும்பாலும் அல்லது நீண்ட காலத்திற்குப் பதவி உயர்த்தப்படுவதில்லை.
- நீதித் துறையின் இத்தரவுகள் உயர் நீதிமன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் சுமார் 1,122 நீதிபதி பதவிகள் இருந்ததைக் காட்டியது.
- உச்ச நீதிமன்றமானது 2022 ஆம் ஆண்டு நவம்பர் 09 முதல் 2024 ஆம் ஆண்டு நவம்பர் 10 வரை மற்றும் 2024 ஆம் ஆண்டு நவம்பர் 11 முதல் 05, மே 2025 வரை என இரண்டு பகுதிகளாகத் தரவை வழங்கியது என்பதோடு இது இந்தியாவின் கடைசி இரண்டு தலைமை நீதிபதிகளின் பதவிக் காலத்தைக் குறிக்கிறது.
- இந்த இரண்டு தலைமை நீதிபதிகளும் முன்னாள் நீதித்துறை உறுப்பினர்களுடன்

தொடர்புடையவர்கள் ஆவர்.

- சந்திரசூட், 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் 1985 ஆம் ஆண்டு வரை தலைமை நீதிபதியாக இருந்த நீதிபதி யஷ்வந்த் சந்திரசூட்டின் மகன் ஆவார்.




## பொருளாதாரச் செய்திகள்

### NLC நிறுவனத்தின் அதிகபட்ச இலாபம்





- இந்திய நெய்வேலி பழுப்பு நிலக்கரி உற்பத்திக் கழக லிமிடெட் (NLCIL) நிறுவனமானது இதுவரை இல்லாத அளவிற்கு அதிக அளவிலான பழுப்பு நிலக்கரி லிக்னைட் மற்றும் நிலக்கரி உற்பத்தியைப் பதிவு செய்துள்ளது.
- இது 2,713.61 கோடி ரூபாய் வரிக்குப் பிந்தைய இலாபத்தை (PAT) பெற்றுள்ளது.
- 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நவரத்னா வகை பொதுத் துறை நிறுவனத்தின் வரலாற்றில், 2024-25 ஆம் நிதியாண்டில் அதிகபட்சமாக 3,696.93 கோடி ரூபாய் வரிக்கு முந்தைய இலாபத்தை (PBT) பெற்றுள்ளது.

- ❖ இது முந்தைய ஆண்டில் பதிவான 2,881.64 கோடி ரூபாயை விட 28.29% அதிகமாகும்.
- ❖ 2023-24 ஆம் ஆண்டில் 126.41 டன்னாக இருந்த NLCIL நிறுவனத்தின் நிலக்கரி உற்பத்தி ஆனது இது வரை இல்லாத அளவிற்கு 172.02 டன் நிலக்கரி உற்பத்தியை எட்டியுள்ளது.
- ❖ முந்தைய நிதியாண்டில் சுமார் 236.80 LT ஆக இருந்த லிக்னைட் உற்பத்தியானது 1.60% அதிகரித்து 240.60 LT ஆக அதிகரித்தது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக இருதயம் குறித்த அறிக்கை 2025





- ❖ உலக இருதயக் கூட்டமைப்பு (WHF) ஆனது இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- ❖ உலக இருதய குழாய்க் கோளாறுகள் தொடர்பான சுமார் 10 உயிரிழப்புகளில் 1 உயிர் இழப்பிற்கு தற்போது அதிக BMI காரணமாக உள்ளது.
- ❖ 2022 ஆம் ஆண்டில், 878 மில்லியன் இளம் வயதினர் உடல் பருமனுடன் வாழ்ந்தனர், இது 1990 ஆம் ஆண்டில் 194 மில்லியனாக இருந்தது.
- ❖ கடந்த 30 ஆண்டுகளில் உடல் பருமன் தொடர்பான இருதய நோயால் ஏற்படும் உயிர் இழப்பு இரு மடங்கிற்கும் அதிகமாகும்.
- ❖ இந்தப் போக்குகள் தொடர்ந்தால், 25 வயதிற்கு மேற்பட்ட இளம் வயதினரில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு பேர் 2050 ஆம் ஆண்டில் அதிக எடை அல்லது உடல் பருமன் கொண்டவர்களாக இருப்பர்.
- ❖ 2021 ஆம் ஆண்டில், 3.7 மில்லியன் உயிரிழப்புகள் அதிக BMI காரணமாக ஏற்பட்டவை ஆகும் என்பதோடு இதில் சுமார் 1.9 மில்லியன் இதய நாளம் சார்ந்த நோய் (CVD) உயிரிழப்புகளும் அடங்கும்.
- ❖ பெண்கள் மத்தியில் பதிவான உலகளாவிய CVD உயிரிழப்புகளில் 10 சதவீதத்திற்கும் அதிகமானவை உடல் பருமனால் ஏற்படுகின்றன. ஆண்களில் இது 8.9% ஆக உள்ளது.
- ❖ இந்தியாவில், 1990 முதல் 2024 ஆம் ஆண்டு வரையில் பெண்களிடையே உடல் பருமன் குறைந்தது ஏழு மடங்கு அதிகரித்துள்ளது.
- ❖ 20 வயதிற்கு மேற்பட்ட இளம் பருவப் பெண்களில் 10% பேர், அதாவது நாட்டில் சுமார் 44 மில்லியன் பேர் உடல் பருமனுடன் வாழ்கின்றனர்.
- ❖ ஒப்பீட்டளவில், ஆண்களிடையே நிலவும் உடல் பருமன் ஆனது, 1990 ஆம் ஆண்டு முதல் 4.9% அதிகரித்துள்ளது என்பதோடு இது தற்போது 26 மில்லியன் இந்திய ஆண்களை

அல்லது இந்தியாவில் உள்ள ஆண்களில் 5% பேரைப் பாதிக்கிறது.

- இந்தியாவில் உடல் பருமனான பெண்கள் ஆண்களை விட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளனர்.

# மாநிலச் செய்திகள்

## புஷ்கர் கும்ப் - உத்தரகாண்ட்





- உத்தரகாண்ட் மாநிலத்தில் மனா என்னுமிடத்திற்கு அருகே உள்ள கேசவ் பிரயாக் எனுமிடத்தில் 12 ஆண்டுகளுக்குப் பிறகு புஷ்கர் கும்பம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- ஸ்ரீ பத்ரிநாத் தாம் அருகே உள்ள மனா, இந்தியாவின் முதல் கிராமம் ஆகும்.
- அந்தச் சமய மரபின்படி, குரு 12 ஆண்டுகளில் மிதுன ராசியில் நுழையும் போது, மனா கிராமத்தில் அலக்நந்தா மற்றும் சரஸ்வதி நதிகளின் சங்கமத்தில் அமைந்துள்ள கேசவ் பிரயாக் பகுதியில் புஷ்கர் கும்பமேளா நடத்தப்படுகிறது.
- இந்த நிகழ்வில் தென்னிந்தியாவின் வைணவர்கள் பிரதானமாக பங்கேற்கின்றனர்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## M.R. ஸ்ரீனிவாசன்

- அணுசக்தி ஆணையத்தின் முன்னாள் தலைவரும் அணுசக்தித் துறையின் முன்னாள் செயலாளருமான M.R. ஸ்ரீனிவாசன் சமீபத்தில் காலமானார்.
- 1956 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற அப்சரா எனப் படும் இந்தியாவின் முதல் அணு ஆராய்ச்சி உலையின் கட்டுமானப் பணிகளில் இவர் டாக்டர் ஹோமி பாபாவுடன் இணைந்து பணியாற்றினார்.
- 1959 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், இந்தியாவின் முதல் அணு மின் நிலையத்தின் கட்டுமானத்திற்கான முதன்மை திட்டப் பொறியாளராக நியமிக்கப்பட்டார்.
- 1984 ஆம் ஆண்டில், அணுசக்தி வாரியத்தின் தலைவர் ஆகப் பொறுப்பேற்றார்.
- 1987 ஆம் ஆண்டில், அவர் அணுசக்தி ஆணையத்தின் தலைவராகவும், அணுசக்தித் துறையின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டார்.

- அதே ஆண்டில், அவர் இந்திய அணுசக்திக் கழகத்தின் (NPCIL) நிறுவனர்-தலைவராக ஆனார்.
- 1990 முதல் 1992 ஆம் ஆண்டு வரை வியன்னாவில் உள்ள சர்வதேச அணுசக்தி நிறுவனத்தில் மூத்த ஆலோசகராகவும் பணியாற்றினார்.
- அவருக்கு பத்மஸ்ரீ (1984), பத்ம பூஷண் (1990) மற்றும் பத்ம விபூஷண் (2015) ஆகிய விருதுகள் வழங்கப் பட்டன.
- அவர் 1996 முதல் 1998 ஆம் ஆண்டு வரை இந்திய அரசாங்கத்தின் திட்டக் குழுவின் உறுப்பினராகப் பதவியாற்றினார்.
- அவர் 2002 முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலும், மீண்டும் 2006 முதல் 2008 ஆம் ஆண்டு வரையிலும் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருந்தார்.




## ஜெயந்த் நர்லிகர் - இந்திய வானியற்பியலாளர்




- இந்தியாவின் மிகப் புகழ்பெற்ற வானியற்பியலாளர்களில் ஒருவரான டாக்டர் ஜெயந்த்

நர்லிகர் காலமானார்.

- 2003 ஆம் ஆண்டில் ஓய்வு பெறும் வரை அவர் பல்கலைக் கழகங்களுக்கு இடைப்பட்ட வானியல் மற்றும் வானியற்பியல் மையத்தின் (IUCAA) இயக்குநராக இருந்தார்.
- 2012 ஆம் ஆண்டில், மூன்றாம் உலக அறிவியல் அகாடமியானது, ஒரு சிறப்பு அறிவியல் மையத்தினை அமைத்ததற்காக இவருக்கு விருது வழங்கியது.
- அவர் தனது அறிவியல் புனைக் கதைகளுக்கும் புகழ் பெற்றவர்.
- அவரின் பிரபலமான அறிவியல் படைப்புகளுக்காக என அவருக்கு 1996 ஆம் ஆண்டில் யுனெஸ்கோவின் கலிங்கா விருது வழங்கப்பட்டது.
- டாக்டர் நர்லிகருக்கு 1965 ஆம் ஆண்டில் அவரது 26 வயதில் அவருக்கு பத்ம பூஷண் விருது வழங்கப் பட்டது.
- 2004 ஆம் ஆண்டில் அவருக்கு பத்ம விபூஷண் விருது வழங்கப்பட்டது.
- மகாராஷ்டிர மாநில அரசானது 2011 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மிக உயரிய குடிமை விருதான மகாராஷ்டிரா பூஷண் விருதை அவருக்கு வழங்கி கௌரவித்தது.
- 2014 ஆம் ஆண்டில், சாகித்ய அகாடமியானது, பிராந்திய மொழியில் (மராத்தி) எழுதப் பட்ட அவரது சுயசரிதையை, அதன் உயரியப் பரிசிற்குத் தேர்ந்தெடுத்தது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★